<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**<u>HMOP. No.8/2025</u>**

| ம.சா. 1 | | தேதி.22.04.2026 | |
|---|---|---|---|
| பெயர் | சித்ரா | க/பெ. | சுரேஷ் |
| வயது | 33 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது.

எனக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 08.09.2021 அன்று நடந்த திருமணத்திற்கு அச்சிடப்பட்ட திருமண அழைப்பிதழ் அசல் **ம.சா.ஆ.**1 ஆகவும், திருமணத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படம் **ம.சா.ஆ.2** ஆகவும், சீர்வரிசை பொருட்களின் இரசீது மற்றும் அந்த கடையின் கார்டு அசல் **ம.சா.ஆ.3** ஆகவும், திருமணத்திற்காக எடுத்த நகைக்கான இரசீது அசல் **ம.சா.ஆ.4** ஆகவும், 12.12.2024 தேதியில் மனுதாரர் வழக்கறிஞர் மூலம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் இரசீது அசல் **ம.சா.ஆ.5** ஆகவும், 14.12.2024 தேதியிட்ட எதிர்மனுதாரர் அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை **ம.சா.ஆ.6** ஆகவும், மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) நகல் **ம.சா.ஆ.7** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.